DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 361 / 2023
Deposition of PW11- திரு. செல்வராஜ் (கு.வி)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.05.2026.
16,19 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது. 1,4,9 ம் எதிரிகள் இறப்பு. மற்ற எதிரிகள் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் கிரையப்பத்திரம் பதிவு செய்து வீடு கட்டிய விபரம் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது 10 வருடம் கழித்து எனக்கு தெரியவந்தது. நான் 2006 –2016 வரை திருப்பூரில் வசித்து வந்தேன். நான் 10 வருட காலம் திருப்பூரில் இருந்ததற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை நான் மரம் வெட்டி வியாபாரம் செய்துவந்தேன். நான் தோட்டத்தில் வேலை பார்த்தற்கான ஆதாரம், என் முதலாளி பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது நினைவில் இல்லை என் உடன் இருந்த நபருக்கு தெரியும். என்னுடன் இருந்தவரின் நபர் பெயர் பெருமாள் அவர் இறந்துவிட்டார் அவர் உப்புத்துரையை சேர்ந்தவர்.

2. பெருமாளின் தந்தை பெயர் நாச்சியப்பன் அவர் தற்போது இல்லை இறந்துவிட்டார். பெருமாளின் மகன் காளிமுத்து ஆவார். நான் ஊரைவிட்டு வெளியே போகவில்லை நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா, அம்மா , அண்ணன் இறந்துவிட்டார்கள் அவர்கள் இறந்த வருடம் நினைவில் இல்லை. என் அப்பா , அம்மா , அண்ணன் இறந்ததற்காக நான் வந்து சடங்கு சம்பிரதாயம் செய்தேன். நான் என் சகோதரிகளுக்கும் எந்த சீர் சிறப்பும் செய்யவில்லை. நான் 2014 ல் சுருளிமலைக்கு ரூ.10 லட்சம்– ற்கு அடமான கடனாக 1 ஏக்கர் 30 சென்ட் நிலத்தினை எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான் அதில் எனக்கு 80 சென்ட் உள்ளது. **மேற்படி அடமான கடன் பத்திரம் எ.சா.ஆ.2**.

3. நான் 2005 ம் வருடம் 1 ஏக்கர் 30 சென்ட் நிலத்தினை கிரையம் செய்தேன்.நான் ராமர்மூப்பர் மகன் ராமன் –க்கு 7 சென்ட் நிலத்தினை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். **நான் ராமர்மூப்பர் மகன் ராமன் –க்கு**

**எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் எ.சா.ஆ.3.** 19.11.2022 ல் நான் ராமன் மகன் ஜெமினிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான் வழக்கு நடைபெற்று வருகிறது. மேற்படி வழக்கு O.S No.116/2023 ஆண்டிபட்டி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் நான் ஆஜராகமல் ஒரு தலை பட்சமாக தீர்ப்பானது என்றால் சரிதான்.

4. 1 ஏக்கர் 30 சென்ட்– க்கு என் பெயரில் வருவாய் துறையினரால் வழங்கப்பட்ட பட்டா உள்ளது என்றால் சரிதான் நான் 1 ஏக்கர் 30 சென்ட்–ல் 7 சென்ட் – யை ராமனுக்கு விற்பனை செய்தேன் மீதம் எனக்கு 1 ஏக்கர் 23 சென்ட் இருக்க வேண்டும் ஆனால் எனக்கு 80 சென்ட் தான் உள்ளது மீதமுள்ள நிலத்தினை எதிரிகள் போலி பத்திரம் தயார் செய்து விற்றுவிட்டார்கள். **மேற்படி பட்டா கணினி நகல் எ.சா.ஆ.4. மற்றும் எ.சா.ஆ.5.** 2006 ல் ராமர்மூப்பர் மகன் ராமக்கு 7 சென்ட் நிலத்தினை கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு 2006 ல் 7 சென்ட் நிலத்தினை நான் கிரையம் கொடுத்த விபரமும், நான் 2022 ல் 1 ஏக்கர் 30 சென்ட் நிலத்திற்கு பட்டா பெற்ற விபரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கடந்த 2021 ம் வருடம் சிலம்பரசன் என்பவருக்கு 1 ஏக்கர் 23 சென்ட் நிலத்தினை அடமானம் பதிந்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

5. ராமன் மகன் ஜெமினி என்பவருக்கு கூட்டுப் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். **கூட்டுப்பட்டா எ.சா.ஆ.6.** புகாரில் 50 சென்ட் நிலம் போக கூடுதலாக 27 சென்ட் நிலத்தினை ஆக்கிரமித்து உள்ளார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் நினைவில் இல்லை. நான் ஏற்கனவே என் முதல் விசாரணையில் 50 சென்ட் நிலத்தினை கிரையம் வாங்கியுள்ளார்கள் என்னுடைய 50 சென்ட் நிலத்தினையும் சேர்த்து வைத்துக் கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 50 சென்ட் நிலத்தினை கிரையம் பெற்றது போக 27 சென்ட் நிலத்தினை ஆக்கிரமித்துள்ளார்கள் என சொல்லியுள்ளேனா என்றால் நினைவில் இல்லை.

6. என்னுடைய பிள்ளைகள் என் சொந்த ஊரில் இருந்து தான் பள்ளிக்கு சென்று படித்தார்கள் என்றால் பையன் ஒருவர் கன்னியப்பபிள்ளைப்பட்டி பள்ளிலும், மற்றொரு மகன் மேலூரில் படித்தார். வில்லங்கச் சொத்தில் இந்திரா குடியிருப்பு கலைஞர் கனவு இல்லம் என்ற பெயரில் வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் விபரம் எனக்கு தெரியாது. 2009 ம் வருடம் உள் சாட்சி வெளி சாட்சி என கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய நிலத்தில் 200

தென்னை மரங்கள் இருக்கும் என்றால் சரிதான். வடமேற்கு பகுதியில் உள்ள தகர செட் என் பெயரில் கிரையம் ஏற்பட்டுள்ளது நான் யாரிடமும் கிரையம் வாங்கவில்லை. என் வசம் உள்ள தகர செட்டிற்கு கிரையம் எதுவும் இல்லை என்றால் சரிதான் என் சொத்து 1 ஏக்கர 23 சென்ட் நிலத்திற்குள் உள்ளது.

7. தகர செட் வடக்கே கம்பி வேலிக்கு வெளியே உள்ளது என்றால் சரிதான். உப்புத்துரையில் இருந்து ஆட்டுப்பாறைக்கு செல்லும் ரோடு என் நிலத்தில் இருந்து எடுத்து பாதையாக அமைத்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் நிலத்தினை ஆக்கிரமிக்கவில்லை என்றால் சரியல்ல. என் ஆவணத்தினை வைத்தோ, என் ஆவணத்தில் உள்ள சர்வே எண்னை வைத்தோ ஆள் மோசடியோ, போலி ஆவணமோ செய்யவில்லை என்றால் சரியல்ல ஆக்கிரமிப்பு உள்ளது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.05.08 16:27:44 +0530

Judicial Magistrate,
Andipatti.